-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும்

இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அலுவலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான மற்றும் தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அலுவலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அலுவலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அலுவலகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அலுவலகத்தின் வளங்கள் சட்டங்களிற்கிணங்கவும் கால சிக்கனமாகவும் வரையறைகளினுள்ளேயும் வினைத்திறனாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனத்திற்கு அவசியமாக உள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுப் பேரேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கும் பொது கணக்கீட்டு குறைபாடுகளை திருத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டிருந்ததுடன் அத்தகைய தவறுகள் ஏற்பட்டிருக்காவின் கணக்கேடுகள் பேணுவதற்கு முறையான நடைமுறைகள் எடுக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அடிப்படை கணக்கேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திநெம்பர் 31 இல் உள்ளவாறான பேரேடுகள் மற்றும் நிதிக்கூற்றுகளுடன் ஒப்பிடும் பொது ஆறு பேரேட்டு கணக்குகளின் மீதி ரூபா 36,850,761 ஆக இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் அந்த ஆறு கணக்குகளின் பெறுமதி ரூபா 38,141,109 ஆக குறிப்பிடப்பட்டிரந்ததுடன் இதன்படி அங்கு ரூபா 1,290,348 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கும் பொது கணக்கீட்டு குறைபாடுகளை திருத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டிருந்ததுடன் அத்தகைய தவறுகள் ஏற்பட்டிருக்காவின் கணக்கேடுகள் பேணுவதற்கு முறையான நடைமுறைகள் எடுக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது வரடுாந்த வாடகை, பாதுகாப்பு செலவினம் மற்றும் இராஜகிரிய புதிய அலுவலக கட்டிடம் தொர்பான நீர் மற்றும் மின்சார செலவினம் என்பவற்றிற்காக ஏற்பட்ட ரூபா 6,615,760 ஆன தொகை வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த செலவினங்கள் நீதி அமைச்சினால் இறுக்கப்பட்டிருந்ததென எழுத்து மூலம் அறிக்கப்பட்டிருக்காமையால் கணக்குகளிற்கு எடுக்க முடியவிலை என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டு சீராக்கல் கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட வேண்டுமென பதயப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் முதலாவது காலாண்டில் ரூபா 300,000 வாடகையை மட்டக்களப்பு கிளை செலுத்தியிருந்த போதிலும் பற்றாக்குறை ரூபா 300,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. ஏனென்றால், வருமான செலவினக் கணக்கில் ரூபா 1,200,000 இற்கு பதிலாக மொத்த வாடகை செலவினம் ரூபா 1,500,000 ஆக காட்டப்பட்டுள்ளது. நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 300,000 ஆல் | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் அவற்றினை திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்து | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரித்தக் காட்டப்பட்டிருந்தது. ஏனென்றால் நிதி நிலமைக் கூற்றில் ரூபா 900,000 இற்கு பதிலாக ரூபா 1,200,000 நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் அட்டுறு செலவினமாக காட்டப்படுவதுடன் மன்னார் கிளை கடைசி காலாண்டிற்காக செலுத்த வேண்டிவை ரூபா 240,000 கணக்கிற்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை. ஆண்டு மாறறங்களின் பற்றாக்குறை மற்றும் நடைமுறைப் பொறுப்புகள் அதே பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மாற்றத்திற்குள்ளான ஆண்டின் வாடகை கணககிற்கு 2020 தொடர்பான ரூபா 423,146 ஆன வாடகை பதியப்படுவதனால் பற்றாக்குறை அதே பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | வருடாந்த சேவை ஒப்பந்தங்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 141,450 உம் 03 ரோனர்கள் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 159,390 மற்றும் மீளாய்வாண்டில் நிலையான சொத்தக்களின் கீழான புதிய கட்டிடத்திற்கு அலுவலகத்தற்கு மாற்றவதற்கு அலுவலக கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்ட ரூபா 484,479 மொத்தமான பொருத்திகள் ரூபா 183,639 பெறுமதியான அலுமனியம், போன்றனவாக காட்டப்பட்டிருந்தமையால் நிலையான சொத்தககள் அந்த பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட சேவை உடன்படிக்கைக்காக மற்றும் ரூபா 300,840 தொகையான ரோனர் கொள்வனவிற்காக செலுத்தபபட்ட தொகை ஆண்டினுடைய வருமான செலவின கணக்கிற்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை பற்றாக்குறை அந்த பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் அவற்றினை திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்து. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |

### 1.5.3. கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகளின்மை

| விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்பட்டிருக்காத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| எரிபொருள் கிரயம் | 2,955,159 | நிறுவனத்தின் வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் கிரயம் தொடர்பான தகவல்கள் மற்றும் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட வாகனங்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்ட எரிபொருள் படி தொடர்புபட்ட தகவல்கள் வழங்கப்பட வேண்டும். | அலுவலகத்திற்கு சொந்தமான CAO 4458 ஆம் இலக்க கார் மற்றும் நீதி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட வாகனங்கள் என்பவற்றிற்காக செலவினம் உள்ளடங்க ரூபா 2,955,159 ஆன எரிபொருள் செலவினம் ஏற்பட்டதுடன் விசாரணை நடவடிக்கை களிற்காக தேவைப்பட்ட எரிபொருள் பெறுவதில் அதன் மீதான கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளிற்கு தொடர்புடைய ஆவணங்கள் இணைக்கப்பட்டிருந்ததென தெரிவிக்கப்பட்டிருந்தது. | கணகாய்விற்காக வேண்டப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு ஒழுங்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவெண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் மகாமைத்தவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 9.1(ஆ). | ரூபா 331,000 மொத்தமான கட்டுநிதி 7 சந்தர்ப்பங்களில் மூன்று நிறைவேற்று தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காமை தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கவில்லை என தெரிவிக்கபபட்டது, விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறைவேற்று தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட வெண்டியிருந்தது. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) பந்தி 9.1(ஆ) மற்றும் நிதிப் பிரமாணம் 371(5) | உபகட்டநிதி வழங்கிய பின்னர் சொல்லப்பட்ட உபகட்டுநிதி வேலைகள் பூர்த்தியான பின்னர் 10 நாட்களிற்குள் திரும்பவும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். ஆனால் 12 | சில சந்தர்ப்பங்களில் நடைமுறைச் சிக்கல் காரணமாக தாமதம் இருந்த போதிலும் எதிர்காலத்தில் முறைமையாக்குவதற்கு எழுத்து மூல | குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் 13 முதல் 65 நாட்கள் வரையான காலமாக 37 வழக்குகளில் பெறப்பட்ட உப கட்டுநிதி தீர்ப்பனவு தாமதப்பட்டிருந்தது. | அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (iii) பந்தி 9.1(ஆ) மற்றும் நிதிப் பிரமாணம் 371 (4) | கணக்கீட்டு உத்தியோகத்தர் குறித்து ஒதுக்கப்படாத மற்றும் தேவையற்ற வேலைகளிற்காக கட்டுநிதி பெறப் பட்டிருக்கவில்லை என குறிப்பிடடிருந்த போதிலும் நான்கு உத்தியோகத்தர்கள் ரூபா 526,800 தொகையான கட்டுநிதியை எடுத்து செலவழிக்காமல் திருப்பிச் செலுத்தியிருந்தனர். | ஆரம்ப விசாரணைகள் நடாத்தவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிரந்தது என அறிவிக்க்பபட்ட பொதிலும் நடவடிக்கைகள் சில சந்தர்ப்பங்களில் நிறுத்தி வைக்க வெண்டியிருந்ததுடன் முழு முற்பணத் தொகையும் திருப்பி செலுத்தப்பட வேண்டியிருந்தது. | குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 1646 | ஒதுக்கப்பட்ட வாகனங்களிற்காக நாளாந்த சாரதி அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு அடுத்தவரும் மாதத்தின் 15 ஆம் நாளிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகையவாறு அலுவலகத்தில் வாகனங்களின் நாளாந்த சாரதி அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிலிருந்து நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை நாளது வரையாக்குவதற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் | குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 3 | வாகனங்கள் தொர்பான எரிபொருள் பரிசோதனை ஒவ்வொரு 12 மாத காலத்திற்கு அல்லது 25000 கிமீ ஓடிய பின்னர் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட பொதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் அந்நேரத்தில் ஓடக்கூடிய நிலையில் இருக்கவில்லை, வாகனங்களை ஓடக்கூடிய நிலைக்கு தேவையான ஒழுங்குகள் செய்த பின்னர் எரிபொருள் பரிசோதனை | குறித்த சுற்றிக்கைப் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 12/2003 iii ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 2017 பெப்ரவரி 27 ஆந் திகதிய 12/2003 iv 03(ஆ) மற்றும் (இ) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | பொது மக்கள் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் ஏனைய விரிவுரைகளின் ஒரேநேர விளக்கங்களிற்காக ஆரம்பத்தில் மணித்தி யாலத்திற்கு ரூபா 500 வீதம் அதிகரிப்பு அடிப்படையில் ஒவ்வெரு மணித்தியாலத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் அலுவலகம் மணித்தயால அடிப்படையில் வேலை செய்திருக்காத 5 ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய 35 மொழி பெயர்ப் பாளர்களிற்கு ரூபா 4,500 வீதத்தில் ரூபா 243,000 ஆன தொகை நாளாந்த வீதததில் செலுத்தப்பட்டிருந்தது. | ஆரம்ப விசாரணைக் குழுவில் பயன்படுத்திய மொழிபெயர்ப்பாளர்கள் இடைக்கால மொழிபெயர்ப்பு மற்றும் பலியானவர் மற்றும் சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட கூற்றின் மொழி பெயர்ப்பு இரண்டிலும் செயலாறியிருந்தனர். அந்த கொடுப்பனவு 8.30 மு.ப இலிருந்து 4.30 பி.ப வரை சேவையாற்றிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் அளவு இரண்டிற்காகவும் செய்யப்பட்டதென குறிப்பிட்டிருந்தனர். | குறித்த சுற்றிக்கைப் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க்பட வேண்டும். |
| (ஈ) 2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய PED 05/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| (i) பந்தி 03 | பொது முயற்சிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களுடைய சேவைக் காலத்தின் போது ஆகக் கூடியது 05 ஆண்டுகளிற்கு வெளிநாட்டில் வேலை செய்வதற்காக சம்பளமற்ற விடுமுறை வழங்க முடிந்த போதிலும், இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தரிற்கு பட்டப்பின்படிப்பை தொடருவதற்கு 05 ஆண்டுகள் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. | விடுமுறை அனுமதிக்கின்றதில் கவனயீனமாக இருந்தனர் என தெரிவிக்கப்பட்டது. | குறித்த சுற்றிக்கைப் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 3.9 மற்றும் 3.13 ஆம் பந்திகள் | 2023 ஒக்தோபர் 02 இல் வெளிநாடு சென்றிருந்த உத்தியோகத்தர் 2024 ஏப்ரல் 30 வரை | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் மாதாந்தம் வதியாதோர் | குறித்த சுற்றிக்கைப் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுற்றறிக்கை பிரகாரம் வெளிநாட்டு நாணயத்தை அனுப்பியிருக்காததுடன் பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கின் விபரங்களை கொண்டிருக்கின்ற விபரங்கள் மற்றும் அதன் முன்னேற்றம் பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சு செயலாளரிற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் இது பின்பற்றப்பட்டிருக்கவில்லை | கணக்கிற்கு பணத்தினை அனுப்புவதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவள் தற்போது வரை பணத்தை அனுப்ப இயலாதிருந்தது என அறிவித்திருந்தார் ஏனென்றால் அவள் வேலையை கண்டுபிடிக்க முடியாதிருந்ததுடன் மேலும் தற்போதைய சபை மற்றும் அமைச்சு செயலாளருக்கு தற்பொதைய நிலையை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அறிவித்திருந்தார். | எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிதி அமைச்சால் வழங்கப்பட்ட 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் இணைப்பு 1 இன் பிரிவு 2 | பூர்த்தியாக்க வெண்டிய தெளிவான உபாயங்கள், குறித்த நடவடிக்கைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் என்பவற்றிற்காக செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நடவடிக்கைகள் இல்லது செயற் பாடுகளிற்காக குறித்த இலக்கு நோக்கங்கள் மற்றும் உபாயங்கள் என்பவற்றின் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கைப் பிரகாரம் செயற்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டது. | குறித்த வழிகாட்டல் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிதி அமைச்சால் வழங்கப்பட்ட 02/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் கூட்டுத்தாபனம், சபைகள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளிற்காக தகவல் தொடர்பு ஏற்பாடுகள் தொடர்பில் 2022 சனவரி 18 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 02 | சுற்றறிக்கைக்கு முரணாக அலுவலகம் சனவரியில் இருந்து ஏப்ரல் வரை மூன்று அலுவலக தொலைபேசி பட்டியலிற்காக ரூபா 46,000 மேலதிமாக செலுத்தியிருந்தது. | மேலதிமாக செலுத்திய தொலைபேசி பட்டியல் 2024 யூலை படிக் கொடுப்பனவில் கழிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டது. | குறித்த சுற்றிக்கைப் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஆம் பந்தி

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சேரத்து வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை அரசியமைப்பின் செயலாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட்டிருந்த தென அறிவிக்கப்பட்டது. | குறித்த அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,545,375 பற்றாக்குறையாக இருந்த அதேநேரம் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,816,253 ஆக இருந்தது இதன்படி நிதிசார் விளைவுகளில் ரூபா 5,729,122 ஆன வீழ்ச்சியை அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் செலவினங்களிற்ககான அரசாங்க பங்களிப்பின் வீழ்ச்சி மற்றும் திருத்த கிரயங்களில் அதிகரிப்பு போன்றவற்றால் பிரதானமாக இந்த வீழ்ச்சி இடம்பெற்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலகம் பூர்த்தியாக்கப்பட்ட விசாரணைகளிற்காக மறுமலர்ச்சிப் படிகளின் கொடுப்பனவிற்காக இழப்பீடாக அலுவலகத்திற்கு 1883 வழக்குகள் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் சொல்லப்பட்ட அலுவலகம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 206 வழக்குகள் தொடர்பில் மறுமலர்ச்சிப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி இழப்பீட்டிற்காக அலுவலகத்தால் படிகளின் கொடுப்பனவு முன்னேற்றம் 10 சதவீமான குறைவாக இருந்த போதிலும் பாதிக்கப்பட்டிருந்த காரணங்கள் தொடர்பில் போதிய தொடர் நடவடிக்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | 2024.02.16 மற்றும் 2024.03.20 ஆந் திகதிய ஆம் OMP/VFS/053 இலக்க கடிதங்களின் பிரகாரம் இது தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதன் பின்னர் மறுமலர்ச்சிப் படி கொடுப்பனவு முன்னேற்றம் வெளிப்படுத்தப்பட்டதென தெரிவிக்கப்பட்டிருந்தது | உரிய காலத்தில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காணாமல் போன நபர்கள் மீதான அலுவலகம் விசாரணைகள் பூர்த்தியான பின்னர் பதிவாளர் நாயக திணைக்களத்திற்கு ஏறத்தாழ 424 கோவைகள் முன்வைக்கப் பட்டிருந்ததுடன் இறப்புச் சான்றிதழ் மற்றும் காணாமல் போனோர் சான்றிதழ் வழங்குவதற்கு முகாமைத்துவ சபையின் பூர்த்தியாக்கல் அறிக்கை | இது தொடர்பில் அமைச்சு செயலாளர், பதிவாளர் நாயகம் மற்றும் ஏனையோரின் பங்குபற்றலுடன் 2023 செப்தெம்பர் 25 இல் கலந்துரையாடல்கள் நடை பெற்றிருந்ததுடன் உரிய சான்றிதழ்கள் வழங்குவதை விரைவுபடுத்தவதற்கு தேவையான கவனம் செலுத்தப் | தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பெறப்படுகின்றன. ஆண்டின் போது 60 சான்றிதழ்கள் அதாவது 14 சதவீதம் மாத்திரம் வழங்கப் பட்டிருந்ததுடன் இது தொடர்பில் போதிய பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டது. |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 255 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளபடியான பதவியணி 43 ஆக இருந்தது. இதன்படி அதிகாரசபையின் நிர்வாக அலுவல்களிற்று நேரடியாக பங்களிப்பு செய்கின்ற 41 பதவிகளில் 23 பதவிகள் வெற்றிடமாக இருந்தது. | பிரதம மந்திரி அலுவலகத்திலிருந்து அனுமதி பெற்ற பின்னர் 2023 ஆம் ஆண்டில் 23 புதிய ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருந்ததுடன் பொது நிர்வாக அமைச்சு மற்றும் பலநோக்கு அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றிடமிருந்து இருக்கின்ற பதவிகளிற்காக – பியோகிக்கின்றதென அறிவிக்கப்பட்டது. விண்ணப்பங்கள் கிடைக்காமையால் ஆட்சேர்ப்பு செய்ய தவறியிருந்தது. | வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்விற்கு வரைவு நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 மே 16 வரையும் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதித் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவியமையால் கணக்குகள் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிப்பதில் தாமதம் நிலவியது என அறிவிக்கப்பட்டது. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சால் வழங்கப்பட்ட 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கை உள்ளடங்கலான ஆண்டறிக்கை கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்த பின்னர் 05 ஆண்டுகளிற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட | நிதித் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவியமையால் கணக்குகள் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிப்பதில் தாமதம் நிலவியது என அறிவிக்கப்பட்டது. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வேண்டிய போதிலும் 2024 யூன் 30 வரையும் 2022 ஆம் ஆண்டு தொடர்புபட்ட ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலுவலகத்தின் இரண்டு பிரதான பிரிவுகளாக இருக்கின்ற ஆராய்ச்சி மற்றும் புலனாய்வு, தகவல் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவுகள் 2016 இன் 14 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் காணாமல் போன ஆட்கள் பற்றிய நிர்வாகம் மற்றும் செயலாற்றல் செயற்றாடுகள் அலுவலகத்தின் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் 11(1)10 ஆம் பிரிவில் குறிபபிடப்பட்டவாறு செயலாற்றல் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளன. அந்த திணைக்களத்தால் செயற்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி மற்றும் புலனாய்வு பிரிவுகள் செயற்பட்டிருக்கவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனென்றால் நிரந்தர உத்தியோகத்தர் இல்லாமையாலும் தகவல் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு திணைக்களத்தில் வெற்றிடங்களிற்காக ஊழியர்கள் ஓய்வு பெற்றிருக்காமையால் இருந்தது. | நிறுவனத்தின் விரும்பிய நோக்கங்கள் நிறை வேற்றப்பட்டிருந்தன என செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்ட ரூபா 5,415,000 பெறுமதியான 25 படையணி தொடர்பில் மீளாய்வாண்டின் போது எவ்வித வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது 3 பிரிவுகள் தொடர்பில் தலைமை பதவிகளின் வெற்றிடம் காரணமாக திட்டமிட்டவாறு வேலைகள் செய்ய முடிவில்லை என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் எவ்வித கட்டணங்களும் சாட்டுதல் செய்யாமல் விரிவான தரவு முறைமை தயாரிப்பதற்கு ICRC உடன்பட்டது. | செயல் நடவடிக்கை திட்டத்தை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 7,750,000 கிரயத்தில் கட்டம் ஒன்று மற்றும் இரண்டின் கீழ் ஆரம்ப புலனாயவுகளிற்காக 7750 கோவைகள் தயாரிப்பதற்கு சட்ட, கொளகை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு திட்டமிட்ட போதிலும் இந்த ஆண்டின் இறுதியில் ரூபா 21,825,578 கிரயத்தில் 2832 கோவைகள் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது ஆதலால் உள்ளபடியான தொகை மதிப்பிடப்பட்ட தொகையை விட 282 சதவீதம் உயர்வாக இருந்தது. | 2832 கோவைகள் தயாரிப்பதற்கு ரூபா 21,825,578 ஆன தொகை மாத்திரம் இருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆரம்ப புலனாய்வுகளிற்கு முன்னர், ஆரம்ப புலனர்வின் போது மற்றும் ஆரம்ப புலனாய்வின் இறுதியில் என்பனவாக சகல கட்டங்களிலும் ஏற்பட்ட மொத்த செலவினமாக இருந்தது | அந்த செலவினங்களை குறைப்பதற்கு ஏற்றவாறு மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 7,500,000 கிரயத்தில் 7500 கோவைகள் மொழிபெயர்ப்பு செய்வதற்கு திட்டமிட்டு பணிப்பாளர் சபையின் அனுமதியும் பெறப்பட்ட போதிலும், ரூபா 135,590 மிரயத்தில் 279 கோவைகள் மாத்திரம் மொழிபெயர்க்கப் பட்டிருந்ததுடன் இது ஆண்டின் போது திட்டமிட்ட வேலைகளை விட ஏறத்தாழ 4 சதவீதம் குறைவாக இருந்தது. | போதய மொழிபெயர்ப்பாளர் இன்மை மற்றும் குறைவான சேவை காகிதாதிகள் மற்றும் எழுதும் தாள்களின் விலை அதிகரித்தல், செய்யப்பட வேண்டிய வரையறுத்த மொழிபெய்ர்ப்பு வேலைகள் என்பவாக அறிவிக்கப்பட்டது. | அந்த செலவினங்களை குறைப்பதற்கு ஏற்றவாறு மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பாதிக்கப்பட்டவர் மற்றும் குடும்ப ஆதரவு பிரிவு காணாமல் போன நபர்களின் பிரச்சனைகள் தொடர்பில் சிவில் பாதுகாப்பு படையினருடன் உரையாடல் வசதிக்கு ரூபா 200,000 ஆன கிரயம் 8 கூட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் ரூபா 175,000 கிரயத்தில3 கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றது. | 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட வேண்டுமென திட்டமிடப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்ட குடும்ப தலைவர் மற்றும் குடும்ப ஆதரவு வெற்றிடம் மற்றும் உத்தியோகத்தர் போதாமை என்பவற்றின் காரணமாக முறையாக பூர்த்தியாக்க முடியாதிருந்தது. | அந்த செலவினங்களை குறைப்பதற்கு ஏற்றவாறு மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |